**IN THE COURT OF THE I ADDL.DIST. COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS P.W.2**

**Pro.O.P.No. 15/2024**

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.10.2025.

**முதல் விசாரணை**

நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அது ம.சா.2 ன் சாட்சியமாக பதிவு செய்யப்படுகிறது.

எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஐ ராமச்சந்திரன் என்ற ராமச்சந்திர கென்னடியால் எழுதிகொடுக்கப்பட்டது. அதில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அதில் 2 வதாக உள்ள சாட்சி கையெழுத்து வெங்கிடசுப்பிரமணி என்பவருடையது ஆகும். அதில் ஒவ்வொரு பக்கமும் ராமச்சந்திர கென்னடி கையெழுத்திட்டார். அவர் கையெழுத்திட்டதை நான் நேரில் பார்த்தேன். பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து நான் சாட்சி கையெழுத்து போட்டேன். அங்கு வைத்து ராமச்சந்திர கென்னடியும், மற்றொரு சாட்சியும் கையெழுத்திட்டார்கள். அங்கு தானும் மற்றொரு சாட்சியும் கையெழுத்திட்டதை ராமச்சந்திர கென்னடி நேரில் பார்த்தார். கையெழுத்திட்ட சமயம் ராமச்சந்திர கென்னடி நல்ல திடகார்த்திரமாக இருந்தார். ராமச்சந்திர கென்னடி சொல்ல சொல்ல பத்திர எழுத்தர் டைப் செய்தார். அந்த பத்திர எழுத்தர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. ம.சா.ஆ.2 ல் இன்னாரென்று நிரூபித்தவர் என்பதற்கு கீழே உள்ள 2 வது சாட்சி கையெழுத்து

என்னுடையது தான். மேற்படி இன்னாரென்று நிரூபித்தவர் என்பதற்கு கீழே உள்ள சாட்சி கையெழுத்தை பத்திர அலுவலகத்தில் வைத்து போட்டேன். அங்கு என்னுடன் வந்த சாட்சியும் கையெழுத்து போட்டார். ராமச்சந்திர கென்னடி கையெழுத்து மற்றும் ரேகை வைத்துள்ளார்.

**குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-ரமேஷ்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.10.28 18:07:38 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.